கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 204/2018**
திரு.ராமசந்திரன் (P.W. –1) **20.12.2024.**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் அரசு அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறேன். தாவா சொத்தை 2009 ஆம் வருடம் விற்பதாக பிரதிவாதி நேரடியாக சொன்னாரா அல்லது வேறு யார் மூலமாக தெரிவுபடுத்தினாரா என்பதை பொறுத்து முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் தவறு பிரதிவாதி சொத்தை விற்பதாக என் மனைவியிடம் சொன்னார். 2009 ஆம் வருடம் தாவா சொத்தை நேரில் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதைப்பற்றி முதலில் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. தாவா கிரைய தொகை முழுவதையும் யார் முன்னிலையில் நான் பிரதிவாதியிடம் செலுத்தினேன் என்று முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. தாவா கிரைய தொகை முழுவதையும் நான் பிரதிவாதியிடம் செலுத்தினேன் அந்த சமயத்தில் அவர் கணவர் உடன் இருந்தார்.

2. தாவா சொத்தை கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுவாதீனம் எடுத்த பிறகு பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க தாவா சொத்தில் அவரை மேலும் இரண்டு வருடங்கள் குடியிருக்க அனுமதித்ததை பொறுத்து வாய்மொழியாக பேசிக் கொண்டீர்களா அல்லது எழுத்துப்பூர்வமான ஒப்பந்தம் ஏற்பட்டதா என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. அதற்கு தனியாக ஒப்பந்தம் உள்ளது அதைப் பற்றி விவரங்கள் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை அதைப்பற்றி பிரச்சனை எழவில்லை. அதனால் தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதிக்கு முதல் விசாரணை பத்தி 8 ல் சொல்லப்பட்டுள்ள உடல்நிலை பாதிப்பை பொறுத்து

ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை.

3. வா.சா.ஆ–1 ஆவணம் தக்ஷிணாமூர்த்தியால் பெறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் கிரைய ஆவணம் ஏற்பட்ட பிறகு சுவாதீனம் எடுத்துக்கொண்ட பிறகு சொத்தை பாதுகாப்பதற்காக பிரதிவாதியை அதில் இருக்க அனுமதித்ததை பொறுத்து ஆவணம் உள்ளதா என்றால் முதலில் வாய்மொழியாக சொன்னோம் அதன் பிறகு ஆவணம் ஏற்பட்டது அந்த ஆவணம் பிரதிவாதியிடம் உள்ளது. பொய்யான ஆவணங்களை தயார் செய்து தாவா தாக்கல் செய்து பொய்சாட்சியும் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சட்டப்படி நிலைக்குத்தக்கதல்ல தாவா பரிகாரங்கள் பெற அருகதை இல்லை என்றால் தவறு தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2024.12.20 11:07:40 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.